©
தமிழ்நாடு அரசு
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 5.60 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 18] சென்னை, புதன்கிழமை, மே 3, 2017
சித்திரை 20, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

---

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை**

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (நிலை) எண் 10, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [(UD 4(2)]த் துறை, 18 ஜனவரி 2017.]*

தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர மற்றும் நாட்டுப்புற அமைப்புத் திட்டமிடல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், நாகப்பட்டினம் உள்ளூர் அமைப்புத் திட்டப் பகுதியில், குறிப்பிட்ட சில கூடுதல் பகுதிகளை சேர்க்கக் கருதியுள்ள அவருடைய நோக்கத்தையும் 10–04–1974 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு 2–இல், 209ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் II(2)/RUL/2019/74 ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தை செய்யக் கருதியிருப்பது பற்றியும் இதனால் அறிவிக்கிறார்.

**2.** இந்த வரைவு அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு திங்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், இது தொடர்பாக, மேற்சொன்ன உள்ளூர் பகுதியிலுள்ள யாதொரு குடியிருப்பாளர் அல்லது யாதொரு உள்ளூர் அதிகாரி அல்லது நிருவனத்திடமிருந்து மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர் மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனும் வரப்பெற்றால், தமிழ்நாடு அரசு அதனை உரியவாறு கருதிப்பார்க்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை எழுத்து மூலமாக, அரசு முதன்மைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்பபுற வளர்ச்சித் துறை, தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ்கோட்டை, சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவுத் திருத்தம்**

மேற்சொன்ன அறிவிக்கையில், உள்ள “அட்டவணைக்கு” பதிலாக, பின்வரும் அட்டவணை அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:–

**அட்டவணை**

| *தொடர் எண்* | *உள்ளூர் அமைப்புத் திட்டப் பகுதியின் பெயர்* | *வருவாய் கிராமங்களின் எண்ணும் பெயரும்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| | நாகப்பட்டினம் | **நாகப்பட்டினம் நகராட்சி** |
| | | **42.** வேளாங்கன்னி (பேரூராட்சி) |
| | | **55.** முட்டம் |
| | | **56.** தெத்தி |
| | | **58.** பாலையூர் |

| *தொடர் எண்* | *உள்ளூர் அமைப்புத் திட்டப் பகுதியின் பெயர்* | *வருவாய் கிராமங்களின் எண்ணும் பெயரும்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| | | **66.** இவனலூர் |
| | | **67.** மஞ்சக்கொல்லை |
| | | **67.** அந்தணப்பேட்டை |
| | | **73.** அக்கரைப்பேட்டை |
| | | **73.** வடக்கு பொய்கைநல்லூர் |
| | | **85.** தெற்கு பொய்கைநல்லூர் |
| | | **68.** புரவச்சேரி |
| | | **69.** சிக்கல் |
| | | **72.** பாப்பாகோவில் |
| | | **74.** கருவேலன்கடை |

**தர்மேந்தர பிரதாப் யாதவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 36, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [(UD 4(2)]த் துறை, 2 மார்ச் 2017.]*

தமிழ்நாடு **1971** ஆம் ஆண்டு நகர **–** நாட்டுப்புற அமைப்புத் திட்டமிடல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் **35/1972**) **10** ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், நாமக்கல் உள்ளூர் அமைப்புத் திட்டப் பகுதியில், குறிப்பிட்ட சில கூடுதல் பகுதிகளை சேர்த்து **22–09–1999** ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு **2** இல், **470–471** ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் II(2)/HOU/1125/99 ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தை செய்வதற்கான அவரது நோக்கத்தை இதனால் அறிவிக்கிறார்**.**

**2.** இந்த வரைவு அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு திங்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், இது தொடர்பாக, மேற்சொன்ன உள்ளூர் பகுதியிலுள்ள யாதொரு குடியிருப்பாளர் அல்லது யாதொரு உள்ளூர் அதிகாரி அல்லது நிறுவனத்திடமிருந்து மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர் மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனும் வரப்பெற்றால், தமிழ்நாடு அரசு அதனை உரியவாறு கருதிப்பார்க்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது**.** மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை எழுத்து மூலமாக, அரசு முதன்மைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ்கோட்டை, சென்னை**–600 009** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்**.**

**வரைவுத் திருத்தம்**

மேற்சொன்ன அறிவிக்கையில், ''அட்டவணை'' என்பதற்குப் பதிலாக, பின்வரும் அட்டவணை அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:**–**

**அட்டவணை**

| *தொடர் எண்* | *உள்ளூர் அமைப்புத் திட்டப் பகுதியின் பெயர்* | *வருவாய் கிராமங்களின் எண்ணும் பெயரும்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| | நாமக்கல் | **நாமக்கல் நகராட்சி** |
| | | **63.** லட்டிவடி |
| | | **64.** கீராம்பூர் |

| *தொடர் எண்* | *உள்ளூர் அமைப்புத் திட்டப் பகுதியின் பெயர்* | *வருவாய் கிராமங்களின் எண்ணும் பெயரும்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| | | 70. கதப்பள்ளி |
| | | 71. சிலுவம்பட்டி |
| | | 75. மரூர்பட்டி |
| | | 82. கொண்டப்பனாய்க்கன்பட்டி |
| | | 83. ரெட்டிப்பட்டி |
| | | 84. பெருமாப்பட்டி |
| | | 85. தூசூர் |
| | | 137. ராசம்பாளையம் |
| | | 145. திண்டமங்கலம் |
| | | 146. எர்ணாபுரம் |
| | | 149. வகுரம்பட்டி |
| | | 150. வேட்டம்பட்டி |
| | | 151. வீசானம் |
| | | 152. வல்லிபுரம் |
| | | 153. தொட்டிப்பட்டி |
| | | 155. பாபினாயக்கன்பட்டி |
| | | 165. முத்துகாபட்டி |
| | | 167. வசந்தபுரம் |
| | | 148. அணியார் |
| | | 144. தளிகை |
| | | 69. நரவலூர்தொட்டிபாளையம் |
| | | 142. சுங்ககாரம்பட்டி |
| | | 140. வில்லிபாளையம் |
| | | 65. கோனூர் |
| | | **திருச்செங்கோடு வட்டம்** |
| | | 111. புத்தூர் (கிழக்கு) |
| | | 112. பொம்மன்பட்டி |
| | | 95. ஏலயபுரம் |

**தர்மேந்தர பிரதாப் யாதவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 14, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 16 மார்ச் 2017.]*

**1948** ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **11/1948**) **3** ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதியிலும், **5** ஆம் பிரிவைச் சேர்ந்த **(2)** உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், **21–11–2012** ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பு வெளியீட்டில் பாகம்–II, பிரிவு **2** இல் **673** மற்றும் **674** ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/784/2012 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், ஆலோசனைக் குழுவினைக் கலந்தாலோசித்த பின்னர் தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில், கீழேயுள்ள விவர அட்டவணையின் **(2)** நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பந்தல் அமைக்கும் பணியில் பணியமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர் வகையினருக்கு, கீழ்க்கண்ட விவர அட்டவணையின் **(3)** நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வழங்கத்தக்கக் குறைந்த அளவு ஊதிய வீதங்களை இதன் மூலம் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு மேற்சொன்ன சட்டத்தின் **5** ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

**(2)** இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும் அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**பந்தல் அமைக்கும் தொழிலில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்* (1) | *தொழிலாளர்களின் வகைகள்* (2) | *நாளொன்றுக்கான குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள்* (3) | | | |
|---|---|---|---|---|---|
| | | *மண்டலம்* A *ரூ. காசு* | *மண்டலம்* B *ரூ. காசு* | *மண்டலம்* C *ரூ. காசு* | *மண்டலம்* D *ரூ. காசு* |
| **1.** | மேற்பார்வையாளர் | **386.50** | **343.00** | **281.00** | **250.00** |
| **2.** | பள்ளம் தோண்டுபவர், கம்பு நடுபவர் | **374.00** | **312.00** | **268.50** | **237.50** |
| **3.** | கூரை வேய்பவர் | **361.50** | **293.50** | **256.00** | **225.00** |
| **4.** | கூரை/கல்நார்/கண்ணாடி/லைட்ரூப் அமைப்பவர் | **349.00** | **287.00** | **250.00** | **213.00** |
| **5.** | அலங்காரத் துணி கட்டுபவர் | **349.00** | **287.00** | **250.00** | **213.00** |
| **6.** | மலர் அலங்காரம் செய்பவர்/ அலங்காரம் செய்பவர் | **337.00** | **281.00** | **237.50** | **206.50** |
| **7.** | வளைவு (ஆர்ச்) அமைப்பவர் | **324.50** | **275.00** | **231.50** | **200.50** |
| **8.** | சாமியானா நடுபவர் | **312.00** | **262.50** | **225.00** | **194.00** |
| **9.** | தென்னை ஓலை பின்னுபவர் | **299.50** | **250.00** | **219.00** | **188.00** |
| **10.** | கூரை அகற்றுபவர் | **287.00** | **237.50** | **213.00** | **182.00** |
| **11.** | பந்தல் பொருட்களைக் கொண்டு செல்பவர் | **275.00** | **231.50** | **200.50** | **175.50** |
| **12.** | மைக் செட்டு/சீரியல் செட்டு இயக்குபவர், மின்உற்பத்தி சாதனத்தை இயக்குபவர் | **262.50** | **225.00** | **194.00** | **169.50** |
| **13.** | கூரை கொண்டு செல்பவர் மற்றும் ஒப்படைப்பவர் | **250.00** | **219.00** | **188.00** | **163.00** |
| **14.** | காவலாள் | **250.00** | **219.00** | **188.00** | **163.00** |

**விளக்கங்கள்:–**

**(1) மண்டலங்களின் வகைப்பாடுகள்.–** மண்டலங்கள் A, B, C மற்றும் D, பின்வரும் பகுதிகளைக் கொண்டிருக்கும்:–

மண்டலம் A -- மாநகராட்சிகள்

மண்டலம் B -- நகராட்சிகள்

மண்டலம் C -- பேரூராட்சிகள்

மண்டலம் D -- கிராமங்கள்

**(2) அகவிலைப்படி**—மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியங்களுடன் தொழிலாளர்களுக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்:—

(i) அகவிலைப்படியானது, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி நாளொன்றுக்கு ரூ.1.00 (ஒரு ரூபாய் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக்குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(iii) அகவிலைப்படியின் முதல் கணக்கீடு, முந்தைய ஆண்டின் சராசரி நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(3) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(4) மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

(6) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்த அளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**பி. அமுதா,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 15, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 16 மார்ச் 2017.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 09—11—2011 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II, பிரிவு 2—ல் 381 முதல் 383 ஆம் பக்கங்கள் வரையில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/தொ.வே.வா/443/2011 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாக, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், தமிழ்நாடு மாநிலத்தில் பாலிதீன் தயாரிப்பு, மிருதுவான ரப்பர் வகைகள் தயாரிப்பு செயல்முறைகள், `பிளாஸ்டிக்' தயாரிப்பு ஆகிய தொழில்களில் ஈடுபட்டுள்ள கீழ்க்காணும் விவர அட்டவணையின் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் சொல்லியுள்ளவாறு முன்னரே வெளியிடப்பட்டுள்ளது.

(2) இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுகின்ற நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**பாலிதீன் தயாரிப்பு, மிருதுவான ரப்பர் வகை செயல்முறைகள், பிளாஸ்டிக் தயாரிப்பு ஆகியவற்றில் வேலைவாய்ப்பு**

| *தொழிலாளர்களின் வகைகள்* | *திங்களொன்றுக்கான குறைந்தளவு ஊதிய வீதங்கள்* |
|---|---|
| *(1)* | *(2)* |
| | *ரூ. காசு* |
| **A. பாலிதீன் தயாரிப்பில் வேலைவாய்ப்பு** | |
| **I. பயிற்சித்திறன் பெறாதவர்கள்** | |
| **1.** இயக்குபவர் | **6047.00** |
| **2.** உதவியாளர் | **5853.00** |

| *தொழிலாளர்களின் வகைகள்* *(1)* | *திங்களொன்றுக்கான குறைந்தளவு ஊதிய வீதங்கள்* *(2)* *ரூ. காசு* |
|---|---|
| **II. ஓரளவு பயிற்சித்திறன் பெற்றவர்கள்** | |
| 1. இயக்குபவர் | |
| 2. சுழற்றுபவர் | 6244.00 |
| 3. நெசவாளர் | |
| 4. பாவு ஒட்டுபவர் | |
| **III. பயிற்சித்திறன் பெற்றவர்கள்** | |
| 1. இயக்குபவர் | |
| 2. உருவம் கொடுப்பவர் | |
| 3. அச்சு இயக்குபவர் | 6636.00 |
| 4. இயந்திரம் இயக்குபவர் | |
| 5. ஜாபர் | |
| **IV. சிறப்பு பயிற்சித்திறன் பெற்றவர்கள்** | |
| 1. மாற்றுப்பணி பொறுப்பாளர் | |
| 2. முதலாளர் | 7616.00 |
| 3. கண்காணிப்பாளர் | |
| **V. பொதுவான வகையினர்கள்** | |
| 1. மேலாளர் | 9382.00 |
| 2. உதவி மேலாளர் | 8205.00 |
| 3. கணக்காளர் | 7224.00 |
| 4. பண்டகசாலைக் காப்பாளர் அல்லது கிடங்கு காப்பாளர் | 7028.00 |
| 5. முதுநிலை உதவியாளர் | |
| 6. கணக்கு உதவியாளர் | 6832.00 |
| 7. எழுத்தர் அல்லது அலுவலக உதவியாள் | |
| 8. தட்டச்சர் | 6931.00 |
| 9. சுருக்கெழுத்து—தட்டச்சர் | 7028.00 |
| 10. வரவேற்பாளர் | 6832.00 |
| 11. ஏவலாள் | 6047.00 |
| 12. விற்பனையாளர் | |
| 13. அலுவலக பணியாள்/அடிப்படைப்பணியாள் | 5853.00 |
| 14. காவலாள் | |

**B. மிருதுவான ரப்பர் வகை தயாரிப்பு செயல்முறைகளில் வேலைவாய்ப்பு**

| | |
|---|---|
| **I. பயிற்சித்திறன் பெறாதவர்கள்** | |
| 1. இயக்குபவர் | |
| 2. தொழிலாளர் நிலை—III | 6244.00 |
| 3. துடைப்பவர் | |
| 4. சிப்பமாக்குபவர் | 5853.00 |
| 5. உதவியாளர் | |

| *தொழிலாளர்களின் வகைகள்*<br>*(1)* | *திங்களொன்றுக்கான குறைந்தளவு ஊதிய வீதங்கள்*<br>*(2)*<br>*ரூ. காசு* |
|---|---|
| **II. ஓரளவு பயிற்சித்திறன் பெற்றவர்கள்** | |
| 1. இயக்குபவர் | |
| 2. கொதிகலன் இயக்குபவர் | 6439.00 |
| 3. பணியாளர் நிலை—II | |
| **III. பயிற்சித்திறன் பெற்றவர்கள்** | |
| 1. இயக்குபவர் | 6636.00 |
| 2. தொழிலாளர் நிலை—I | |
| **IV. சிறப்பு பயிற்சித்திறன் பெற்றவர்கள்** | |
| 1. இளநிலை செயல் அலுவலர் | 8597.00 |
| 2. முதலாள் | |
| 3. கண்காணிப்பாளர் | 7616.00 |
| 4. பிரிவுத் தலைவர் | |
| **V. பொதுவான வகையினர்கள்** | |
| 1. மேலாளர் | 9382.00 |
| 2. உதவி மேலாளர் | 8205.00 |
| 3. கணக்காளர் | 7224.00 |
| 4. பண்டகக் காப்பாளர் அல்லது கிடங்குக் காப்பாளர் | 7028.00 |
| 5. முதுநிலை உதவியாளர் | |
| 6. கணக்கு உதவியாளர் | |
| 7. எழுத்தர் அல்லது அலுவலக உதவியாள் | 6832.00 |
| 8. வரவேற்பாளர் | |
| 9. தட்டச்சர் | 6931.00 |
| 10. சுருக்கெழுத்து—தட்டச்சர் | 7028.00 |
| 11. ஏவலாள் | 6047.00 |
| 12. விற்பனையாளர் | |
| 13. அலுவலக பணியாள் அல்லது அடிப்படைப்பணியாள் | 5853.00 |
| 14. காவலாள் | |

**இ. பிளாஸ்டிக் தயாரிப்பில் வேலைவாய்ப்பு**

| | |
|---|---|
| **I. பாயிற்சித்திறன் பெறாதவர்கள்** | |
| 1. இயக்குபவர் | 6047.00 |
| 2. உதவியாள் | |
| 3. பணி முடிவாக்குபவர் | 5853.00 |
| 4. சிப்பம் செய்பவர் அல்லது அனுப்புகை உதவியாளர் | |

| | *தொழிலாளர்களின் வகைகள்* *(1)* | *திங்களொன்றுக்கான குறைந்தளவு ஊதிய வீதங்கள்* *(2)* *ரூ. காசு* |
|---|---|---|
| **II.** | **ஒரளவு பயிற்சித்திறன் பெற்றவர்கள்** | |
| 1. | இயக்குபவர் | |
| 2. | பட்டறை இயக்குபவர் | |
| 3. | இயந்திர உதவியாளர் | |
| 4. | கடைசலாள் | |
| 5. | அச்சிடுபவர் | 6244.00 |
| 6. | பற்றவைப்பவர் | |
| 7. | ஒருங்கிணைப்பவர் | |
| 8. | நறுக்குபவர் | |
| 9. | இயந்திரம் இயக்குபவர் | |
| 10. | தையற்காரர் | |
| 11. | ஆய்வுக்கூட உதவியாளர் | |
| **III.** | **பயிற்சித்திறன் பெற்றவர்கள்** | |
| 1. | இயக்குபவர் | |
| 2. | அமைப்பவர்—இயக்குபவர் | |
| 3. | வார்ப்படம் தயாரிப்பவர் | 6636.00 |
| 4. | மின் கம்மியர் | |
| 5. | அச்சு தயாரிப்பவர் | |
| **IV.** | **சிறப்பு பயிற்சித்திறன் பெற்றவர்கள்** | |
| 1. | முதலாள் | 7616.00 |
| 2. | மேற்பார்வையாளர் | |
| **V.** | **பொதுவான வகையினர்கள்** | |
| 1. | மேலாளர் | 9382.00 |
| 2. | உதவி மேலாளர் | 8205.00 |
| 3. | கணக்காளர் | 7224.00 |
| 4. | கணினி நிரல் தயாரிப்பவர் | |
| 5. | பண்டகக் காப்பாளர் அல்லது கிடங்குக் காப்பாளர் | 7028.00 |
| 6. | முதுநிலை உதவியாளர் | |
| 7. | கணக்கு உதவியாளர் | 6832.00 |
| 8. | எழுத்தர் அல்லது அலுவலக உதவியாள் | |
| 9. | வரவேற்பாளர் | |
| 10. | தட்டச்சர் | 6931.00 |
| 11. | சுருக்கெழுத்து—தட்டச்சர் | 7028.00 |
| 12. | ஏவலாள் | 6047.00 |
| 13. | விற்பனையாளர் | |
| 14. | அலுவலக பணியாள்/அடிப்படைப்பணியாள் | 5853.00 |
| 15. | காவலாள் | |

**விளக்கங்கள்:**

**(1) அகவிலைப்படி**: மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியங்களுடன் பணியாளர்களுக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்படவேண்டும்:—

*(i)* அகவிலைப்படியானது, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் **சராசரி** விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி **நாளொன்றுக்கு ரூ.36.35** (முப்பத்து ஆறு ரூபாய் முப்பத்தி ஐந்து காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

*(ii)* முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) **சராசரி விலைக்குறியீட்டினை** அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்படவேண்டும்.

*(iii)* முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர **சராசரி நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்ணை** அடிப்படையாகக்கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

**(2)** பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

**(3)** மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு நாள் ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

**(4)** தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**பி. அமுதா,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை(2D) எண் 16, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 16 மார்ச் 2017.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும். 23—01—2013 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II, பிரிவு—2 இல் 63 மற்றும் 64ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/99/2013 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை இரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்தப் பின்னர், தமிழ்நாடு மாநிலத்தில் அச்சகத் தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழ்க்காணும் விவர அட்டவணையின் (1)ஆம் நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் நிகரானப் பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின், (b) பகுதியில் கோரியுல்லவாறு முன்னரே வெளியிடப்பட்டுள்ளது.

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**விவர அட்டவனை**

**அச்சகத் தொழிலில் வேலைவாய்ப்பு**

*குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (ரூபாயில்) (மாதமொன்றுக்கு)*

| *தொழிலாளர்களின் வகைகள்* <br> *(1)* | *மண்டலம்–A* <br> *ரூ. காசு* <br> *(i)* | *மண்டலம்–B* <br> *ரூ. காசு* <br> *(ii)* | *மண்டலம்–C* <br> *ரூ. காசு* <br> *(iii)* |
|---|---|---|---|
| **தொகுதி–I** | | | |
| கணக்காளர், முதலாள் மற்றும் மேற்பார்வையாளர் | 5260.00 | 5015.00 | 4913.00 |
| **தொகுதி–II** | | | |
| எழுத்தர், காசாளர், தட்டச்சர் சுருக்கெழுத்து–தட்டச்சர், நேரக்காப்பளர், தனி அச்சு இயந்திரத்தை இயக்குபவர், (Mono-operator) தனி அச்சு வார்ப்பு இயந்திரத்தை இயக்குபவர் (Mono-caster), வரி அச்சு இயந்திரத்தை இயக்குபவர் (Line operator), எதிரீட்டு அச்சிடுபவர் (off-set printer), ஓவியர், கேமராமேன், அச்சு பதிப்பவர் மற்றும் தானியங்கி இயந்திரத்தை இயக்குபவர் | 5119.00 | 4883.00 | 4762.00 |
| **தொகுதி–III** | | | |
| பார்வைப் படி திருத்தம் செய்பவர் (Proof reader), உருளை மிதி அச்சு இயந்திரத்தை இயக்குபவர், (Cylinder treadle machine man), சமதளப் படிமத் தட்டுத் தயாரிப்பவர் (Plate maker), மின் கம்மியர், அச்சு கோப்பவர், கட்டுநர், கோடு வரைபவர், கிரைண்டர் மற்றும் தாள் அணைப்பு இயந்திரத்தை இயக்குபவர் (Feeder) | 4979.00 | 4742.00 | 4629.00 |
| **தொகுதி–IV** | | | |
| சுழற்றுபவர் (Wheeler), உதவியாளர், அலுவலக வேலையாள், ஏவலாள், காவலாள், சிப்பம் கட்டுபவர் மற்றும் தொழில் பழகுநர் | 4790.00 | 4543.00 | 4516.00 |

***விளக்கங்கள்:***

**(1) மண்டலங்களின் வகைப்பாடு—**A, B மற்றும் C ஆகிய மண்டலங்கள் கீழ்க்கண்ட பகுதிகளைக் கொண்டிருக்கும்.

***(i)* மண்டலம்—A:** அனைத்து மாநகராட்சிகள் மற்றும் சிறப்புநிலை நகராட்சிகள்

***(ii)* மண்டலம்—B:** சிறப்பு நிலை நகராட்சிகளைத்தவிர ஏனைய அனைத்து நகராட்சிகள்

***(iii)* மண்டலம்—C:** மண்டலம்-A மற்றும் மண்டலம்—B ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவை நீங்கலாக, ஏனைய அனைத்துப் பகுதிகள்

**(2) அகவிலைப்படி:** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியங்களுடன் தொழிலாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

*(i)* அகவிலைப்படியானது, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி, திங்கள் ஒன்றுக்கு ரூ.28.00 (ரூபாய் இருபத்தெட்டு மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

*(ii)* முந்தைய 12 மாதங்களுக்கான அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரையிலான நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

*(iii)* முந்தைய ஆண்டிற்கான நுகர்வோர் சராசரி விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்குவரும்.

**(3)** பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

**(4)** நாள் ஊதியத்தைக் கண்க்கிடுவதற்கு, மாதாந்திர ஊதியத்தை 26ஆல் வகுக்க வேண்டும்.

**(5)** தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களில் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**பி. அமுதா,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2ப) எண் 17, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 16 மார்ச் 2017.]*

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 09—11—2011ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு 2—ல் 383ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/தொ.வே.வா/444/2011ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்து விட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், தமிழ்நாடு மாநிலத்தில் இரசாயன உரத்தொழிற்சாலையில் பணியமர்த்தப்பட்டுள்ளவர்களும் கீழ்க்காணும் விவர அட்டவணையின் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளைச் சேர்ந்தவர்களுமாகிய தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு முன்னரே வெளியிடப்படுகிறது.

(2) இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**இரசாயன உரத்தொழிற்சாலையில் வேலைவாய்ப்பு**

| *பணியாளர்களின் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (மாதமொன்றுக்கு) ரூபாய். காசு* |
|---|---|
| *(1)* | *(2)* |
| **1. நிருவாகப் பணியாளர்கள்:** | |
| (1) மேலாளர் | 7276.00 |
| (2) எழுத்தர்/தட்டச்சர்/கணக்கர் | 6129.00 |
| (3) ஓட்டுநர்/பண்டகசாலைக் காப்பளர் | 5964.00 |
| (4) அலுவலக உதவியாளர் | 5637.00 |
| **2. தொழிலாளர்களின் வகை:** | |
| (1) உயரளவு பயிற்சி பெற்றவர்கள் தொழில்நுட்ப மேற்பார்வையாளர்கள்/ வேதியியலாளர் | 6866.00 |
| (2) பயிற்சி பெற்றவர்கள் இயக்குபவர்/தொழில்நுட்ப பணியாளர்/மின் கம்மியர்/பொருத்துநர் | 6293.00 |
| (3) பயிற்சி பெறாதவர்கள் பொதுவான தொழிலாளர்கள்/உதவியாளர்/நிரப்புநர் | 5963.00 |

**விளக்கங்கள்:— (1)** அகவிலைப்படி: மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்களுடன், தொழிலாளர்களுக்கு பின்வரும் அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

*(i)* அகவிலைப்படியானது, 2010ஆம் ஆண்டு சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது. அதாவது 161 புள்ளிகள் (2001ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்ட) மற்றும் 161 புள்ளிக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் மாதமொன்றுக்கு 35 ரூபாய் (முப்பத்தைந்து ரூபாய் மட்டும்) அகவிலைப்படியாக வழங்கப்பட வேண்டும்.

*(ii)* இந்த அகவிலைப்படி, முந்தைய 12 (பன்னிரண்டு) மாதங்களுக்கான அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை, நுகர்வோர் சராசரி விலைப்புள்ளியின் அடிப்படையில் ஒவ்வொராண்டும் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து கணக்கிடப்பட வேண்டும்.

*(iii)* முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைப்புள்ளி குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து அகவிலைப்படியின் முதல் கணக்கீடு செயலுக்கு வரும்.

(2) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு, மாதாந்திர ஊதியம் 26ஆல் வகுக்கப்பட வேண்டும்

(3) ஆண், பெண் தொழிலாளர்கள் ஒரே தன்மையுடைய வேலையைச் செய்யும்போது, ஊதியம் வழங்குவதில் ஆண், பெண் தொழிலாளர்களிடையே பாகுபாடுகாட்டக்கூடாது.

(4) இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் தற்போதுள்ள ஊதியங்கள் கூடுதலாக இருக்குமிடங்களில், அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

(5) இரசாயன உரத் தொழிற்சாலையில் பணியமர்த்தப்படும் பாதுகாப்புச் சேவை வகையினருக்கு நிர்ணயிக்கபப்பட்ட/ திருத்தியமைக்கப்பட்ட குறைந்தளவு ஊதியங்கள் பொருந்தும்.

**பி. அமுதா,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 47, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (I2)த் துறை, 16 மார்ச் 2017.]*

தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினையும் பணி நிலைமைகளையும் முறைப்படுத்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனை குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், தமிழ்நாடு 1994ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமான தொழிலாளர்கள்) நலத்திட்டத்தில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார்.

**திருத்தம்**

மேற்சொன்ன திட்டத்தில், 13ஆம் பகுதியின் (1) துணை பகுதியில் வருகிற வரம்பு நிபந்தனைக்கு பின்னர், பின்வரும் வரம்பு நிபந்தனை சேர்க்கப்பட வேண்டும், அதாவது:—

"மேலும் கட்டுமானத் தொழிலில் பணியமர்த்தப்பட்ட பதிவுபெற்ற உடலுழைப்புத் தொழிலாளர் தமிழ்நாட்டில் நிரந்தரமாக குடியிருப்பவராக இருந்தால் மட்டுமே அவர் அல்லது அவருடைய நியமனதாரர்கள் ஓய்வூதியம் பெற தகுதியுடையவர் ஆவர்.

**பி. அமுதா,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 53, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (K2)த் துறை, 22 மார்ச் 2017.]*

தமிழ்நாடு 1947ஆம் ஆண்டு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1947) 6ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 23—3—2016ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு 2—இல் 233—234ஆம் பக்கங்களில் வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/தொ.வே.வா/242/2016ஆம் எண் அறிவிக்கையைத் தொடர்ந்தும், தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், பொது நலனைக் கருத்தில் கொண்டு, அனைத்து நிறுவனங்களையும் மேற்சொன்ன சட்டத்தின் 11ஆம் பிரிவை சேர்ந்த (1) உட்பிரிவில் அளிக்கப்பட்டிருக்கும் விதித்துறையிலிருந்து விலக்களித்து, அவை திரும்பப் பெறப் பெற்றாலன்றி, பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு, 23—3—2017ஆம் நாளிலிருந்து மேலும் மூன்று ஆண்டுகளுக்கு, தமிழ்நாடு மாநிலத்திலிருக்கும் அனைத்து நிறுவனங்களையும் ஆண்டின் அனைத்து 365 நாட்களிலும் திறந்து வைத்திருப்பதற்கான அனுமதியை இதனால் வழங்குகிறார்.

(1) சுழற்சி முறையில் ஒவ்வொரு பணியாளருக்கும் வாரத்தில் ஒரு நாள் விடுமுறை அளிக்கப்பட்டும் ஒவ்வொரு பணியாளரின் விவரங்களும் 'படிவம் S' இல் அளிக்கப்பட்டு நிறுவனங்களின் பார்வைக்குரிய இடமொன்றில், வேலையளிப்பவரால் காட்சிக்கு வைக்கப்படவேண்டும்.

(2) ஒவ்வோரு •வேலையளிப்பவரும், நாள்தோறும், விடுமுறையில்/விடுப்பில் இருக்கும் பணியாளர்களின் விவரங்களை, நிறுவனங்களில் பார்வைக்குரிய இடமொன்றில் காட்சிக்கு வைக்க வேண்டும்.

(3) மிகைநேரப் பணி ஊதியங்கள் உட்பட, பணியாளர்களின் ஊதியங்கள், அவர்களது வங்கி சேமிப்புக் கணக்கில் வரைவு வைக்கப்பட வேண்டும்

(4) வேலையளிப்பவர், அங்கே பணியமர்த்தப்படும் யாதொரு நபரையும், யாதொரு நாளிலும் எட்டு மணி நேரத்திற்கு மிகையாக, யாதொரு வாரத்திலும் நாற்பத்து எட்டு மணி நேரத்திற்கு மிகையாகப் பணிபுரிய வலியுறுத்தவோ அல்லது அனுமதிக்கவோ கூடாது. மேலும் மிகைநேரப் பணி உட்பட பணிபுரியும் கால அளவானது, யாதொரு நாளிலும் பத்து மணி நேரத்திற்கு மிகாமலும், வாரம் ஒன்றிற்கு ஐம்பத்து நான்கு மணி நேரத்திற்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

(5) மிகைநேரப் பணிக்கான முறையான கோரிக்கை இல்லாமல், யாதொரு விடுமுறை நாளிலோ அல்லது வழக்கமாக பணி நேரங்களுக்குப் பிறகோ பணியாளர்கள் பணிபுரிவதாகக் கண்டறியப்பட்டால், தமிழ்நாடு 1947ஆம் ஆண்டு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 36/1947) மற்றும் தமிழ்நாடு 1948 ஆம் ஆண்டு கடைகள் மற்றும் நிறுவனங்கள் விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, வேலையளிப்பவர்/மேலாளர் மீது தண்டனையளிப்பதற்கான நடவடிக்கை தொடங்கப்படும்.

(6) வழக்கமான சூழல்களில், பெண் ஊழியர்களை மாலை 8.00 மணிக்கு மேல் பணிபுரியுமாறு கோரக்கூடாது.

(7) முறைமாற்றுப் பணிகளில் பணிபுரியும் பெண் பணியாளர்களுக்கு, போக்குவரத்து வசதிகள் செய்துதர வேண்டும். இவ்வகையில், போக்குவரத்து வசதிகள் கிடைக்கப்பெறுவதைக் குறிப்பிடும் அறிக்கை ஒன்று, நிறுவனத்தின் முதன்மை நுழைவாயிலில் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும்.

(8) பணியாளர்களுக்கு ஓய்வறை, கழிவறை, பாதுகாப்புப் பெட்டகங்கள் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

**(9)** பெண் பணியாளர்களைப் பணியமர்த்தும் ஒவ்வொரு வேலையளிப்பவரும், பெண்கள் மீதான பாலியல் தொல்லைகளுக்கு எதிராக, **2013** ஆம் ஆண்டு பணியிடத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை (பாதுகாத்தல், தடுத்தல் மற்றும் குறைகளைதல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் **14/2013**) கீழ் 'பணியிடத்தில் புகார் அளிப்பதற்கான குழு' ஒன்றை அமைக்க வேண்டும். அது நடைமுறையில் இருக்க வேண்டும்.

**(10)** சட்டம் மற்றும் விதிகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் விதித்துறைகளோடு, மேற்சொன்ன நெறிமுறைகளும் வரையறைகளும் கருத்தில் கொள்ளப்பட்டு, செயல்படுத்தப்பட வேண்டும்.

**(11)** ஏதேனும் சட்ட விதித்துறை அல்லது மேற்சொன்ன நெறிமுறைகள் மற்றும் வரையறைகளில் ஏதேனும் மீறப்படுவதாக, ஆய்வாளரால் அல்லது பிற வழிகளில் கண்டறியப்படும் நேர்வில், தமிழ்நாடு **1947**ஆம் ஆண்டு கடைகள் மற்றும் நிறுவனங்கள் விதிகள் (தமிழ்நாடு சட்டம் **36/1947**) மற்றும் தமிழ்நாடு **1948**ஆம் ஆண்டு கடைகள் மற்றும் நிறுவனங்கள் விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, வேலையளிப்பவருக்கு/மேலாளருக்கு எதிராகத் தண்டனையளிப்பதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**பி. அமுதா,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 64, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (K2)த் துறை, 4 ஏப்ரல் 2017.]*

**1926**ஆம் ஆண்டு தொழிற்சங்கங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **16/1926**) **29**ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், **1927**ஆம் ஆண்டு தொழிற்சங்கங்கள் விதிமுறைகளில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் **30**ஆம் பிரிவில் கோரப்பட்டுள்ளவாறு முன்னரே வெளியிடப்பட்டுள்ளது.

## திருத்தங்கள்

மேற்சொன்ன விதிமுறைகளில்,—

**(1)** பகுதி **14**இல் "ரூ.**100** (ரூபாய் நூறு மட்டும்)" என்ற சொற்றொடருக்கு பதிலாக, "ரூ. **1000** (ரூபாய் ஆயிரம் மட்டும்)" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

**(2)** பகுதி **15**இல் துணைப்பகுதி **(2)**இல் "ரூ.**25** (ரூபாய் இருபத்தைந்து மட்டும்)" என்ற சொற்றொடருக்கு பதிலாக, "ரூ. **250** (ரூபாய் இருநூற்று ஐம்பது மட்டும்)" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

**பி. அமுதா,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.